**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 23 ம் நாள் புதன் கிழமை

**அசல் வழக்கு எண். 15/2023**

வாதி தரப்பு சாட்சியாக PW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தமிழரசன் | Father Name | : | மாரிமுத்து |
| Village | : | உத்தாணி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | டீக்கடை வியாபாரம் |
| Religion | : | | Age | : | 60 |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு **விசாரணை** -

இறந்துபோன கோவிந்தம்மாளின் கணவர் பெயர் சிங்காரம் என்றால் சரிதான். சிங்காரம் எந்த தேதியில் இறந்தார் என்றும் எந்த முகவரியில் இறந்தார் என்றும் மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். சிங்காரத்திற்கும் இறந்துபோன கோவிந்தமாளுக்கும் குழந்தைகள் இல்லை என்பதை நிரூபிக்கும் விதமாக எவ்வித ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சிங்காரத்தின் இறப்பு சான்றிதழோ அல்லது வாரிசு சான்றோ பெற்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறந்துபோன கோவிந்தம்மாளின் தகப்பனாரின் பெயர் சிங்காரம் அவரது தாயார் பெயர் அம்மாக்கண்ணு. கோவிந்தம்மாளின் தகப்பனார் மற்றும் தாயாரின் இறப்பு சான்றிதழோ அல்லது வாரிசு சான்றிதழோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சிங்காரம் இறந்ததற்கு அவரது வம்சாவளி பட்டியல் ஏதும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடன் உடன்பிறந்தவர்கள் 1ம் வாதியான புண்ணியமூர்த்தி மற்றும் ருக்மணி, மனோன்மணி, கஸ்தூரி ஆகிய சகோதர சகோதரிகள் உள்ளனர் என்றால் சரிதான். மனோன்மணி , கஸ்தூரி மற்றும் ருக்மணி ஆகியோரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை

என்றால் சரிதான். இறந்துபோன கோவிந்தம்மாளுக்கு உடன்பிறந்தவர் எனது தகப்பனார் மட்டும்தான். இறந்துபோன கோவிந்தம்மாளுக்கு உடன் பிறந்தவர் எனது தந்தை மாரிமுத்து மட்டும்தான் என்பதற்கு எந்த ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறந்துபோன கோவிந்தம்மாள் எங்களுடன் தான் வசித்து வந்தார் என்பதற்கு எந்த ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறந்துபோன கோவிந்தம்மாளின் கணவர் சிங்காரம் எந்த ஊர் எங்கு வசித்து வந்தார் என்றால் தஞ்சாவூர் மாவட்டம், வயலூர் கிராமத்தில் வசித்து வந்தார். இறந்துபோன கோவிந்தம்மாளுக்கு சொத்துக்கள் உள்ளதாகவும் அதனை நான் மாற்றம் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளதற்கு எந்த ஊரில் எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றும் அது எவ்வாறு கிடைத்தது என்றும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். உத்தாணி மற்றும் நல்லூர் கிராமத்தில் சில சொத்துக்கள் உள்ளது. நான் உரிமையியல் நடைமுறை சட்டத்தின் படி தமிழக அரசை ஒரு தரப்பினராக சேர்க்காததாலும் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பாததாலும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் உரிய தரப்பினர்களை சேர்க்காததாலும் வழக்கை நிரூபிக்கும் விதமாக சரியான ஆவணங்களை தாக்கல் செய்யாததாலும் வேண்டுமென்றே வாரிசுகளை சேர்க்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாலும் இவ்வழக்கில் நீங்கள் கேட்கும் பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2025.07.23 17:26:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.